**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.112/2023
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : முருகேஸ்வரி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of September 2024.

18.09.2024

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர், 3ம் எதிரி ஆஜர் இல்லை. 3ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 2020ம் வருடம் 11ம் மாதம் தேதி தற்போது எனக்கு நினைவில் இல்லை மாலை 04.00 மணியளவில் 1ம் எதிரி தனிக்கொடி எனது தலைமுடியை பிடித்து இழுத்து என்னை கீழேபோட்டு தேவிடியா அவுசாரி என்று கூறி அடித்தார். 2ம் எதிரி மலைராஜ்யும் 3ம் எதிரி வினோத்யும் என்னை அடித்தார்கள். அப்போது சண்டையை விலக்க வந்த எனது மகன் பிரபுவை 2ம் எதிரி மலைராஜ் வாயில் குத்திவிட்டார். உடனடியாக காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1).** போலிசார் என்னை விசாரித்தார்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.